# <u>குழித்துறை நகராட்சி</u>

## <u>குழித்துறை நகர்மன்றத்தின் 25-01-2022 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்</u>

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சியில் பேருந்து நிலையம் செல்லும் கருங்கல் சாலையில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.D12/82-ல் மீன்சந்தை மற்றும் தினசரி காய்கறி சந்தை 13380ச.மீ. பரப்பளவில் செயல்பட்டு வருகின்றது. இதில் தினசரி காய்கறி சந்தை 8500 ச.மீ. பரப்பளவில் சுமார் 60 வருடங்களாகச் செயல்பட்டு வருகின்றது. அங்குள்ள கடைகள் அனைத்தும் 30 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டதாகும். தற்பொழுது தினசரி காய்கறி சந்தையில் 254 எண்ணிக்கை கடைகள் தனித்தனியே ஏலம் விடப்பட்டு நடைமுறையில் உள்ளது. காய்கறி சந்தையின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.1,80,53,911/- ஆகும். கடைகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து காணப்படுவதால் அதனை முற்றிலும் அகற்றி விட்டு புதியதாகக் கடைகள் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே சந்தையில் உள்ள 253 கடைகளையும் இடித்து விட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.423.90 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் பங்குத் தொகை ரூ.296.73 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.127.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி G.O.(MS)No.16, Date : 20-01-2022-ல் பெறப்பட்டுள்ளது. இதற்கு தொழிற்நுட்ப அனுமதி பெறுவதற்கு நகராட்சி தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1967/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3842**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான உரிமம் 31-03-2022-வுடன் முடிவடைய உள்ளதால் கடைகளுக்கான உரிமம் புதுப்பித்து வழங்கிடவும் ஒராண்டு உரிம இனங்களுக்கு மறுஏலம் கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

I. <u>ஓராண்டு குத்தகை இனங்கள்</u> :-

1) பலன் தரும் மரங்கள்.
2) வாழைதார் உறையிடுதல்.
3) காய்கறி சந்தை, நுழைவு கட்டணம் மற்றும் தரை வாடகை வசூல்.
4) நவீன மீன்சந்தை, லாறிபேட்டை வந்து செல்லும் வாகனங்களிலிருந்து விற்பனைக்கு வரும் மீன்பெட்டி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

II. <u>மூன்றாண்டு குத்தகை இனங்கள்</u> :-

1) மார்த்தாண்டம் காய்கறி சந்தை A. பிளாக் கடை எண்கள் 1 முதல் 53 வரை
2) மார்த்தாண்டம் காய்கறி சந்தை B. பிளாக் 1 முதல் 48 வரையிலான கடைகள்
3) மார்த்தாண்டம் காய்கறி சந்தை C. பிளாக் 1 முதல் 3, 8 முதல் 49 வரையிலான கடைகள்
4) மார்த்தாண்டம் காய்கறி சந்தை D. பிளாக் 1 முதல் 6 வரையிலான கடைகள்
5) மார்த்தாண்டம் காய்கறி சந்தை F. பிளாக் 1 முதல் 4 வரையிலான கடைகள்
6) மார்த்தாண்டம் காய்கறி சந்தையினுள் தற்காலிக கடைகள் 1 முதல் 12 மற்றும் 14, 15, 16 வரையிலான கடைகள்
7) மார்த்தாண்டம் காய்கறி சந்தை IDSMT கடைகள் 1 முதல் 28 வரை
8) மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடைகள் 1 முதல் 43 வரை
9) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் A. பிளாக் கடைகள் 2 முதல் 8, 11, 13 கடைகள்
10) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் B. பிளாக் கடைகள் 4, 5, 8, 10
11) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பழைய கடைகள் 1, 4, 5, 6, 7, 8, 11, 12, 13, 15
12) பி.பி.முனுசாமி வணிகவளாக கடைகள் G1, G6, G7, G10, F1, F2, F3, F4, F5, FR6, F7
13) காமராஜர் வணிகவளாகம் வெட்டுவெந்நி 1 முதல் 5 வரையிலான கடைகள்
14) குழித்துறை வணிகவளாக கடைகள் 1 முதல் 7 வரையிலான கடைகள்

மேற்படி குறிப்பிட்டுள்ள ஒராண்டு குத்தகை இனங்களுக்கு மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு ஏற்கனவே மாத வாடகையில் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3843**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

குழித்துறை நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் கூட்டுறவு அச்சகம் தக்கலையிலிருந்து அச்சிட்டு பெறப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.2,04,630/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.180/2007/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3844**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

குழித்துறை நகராட்சி விளவங்கோடு வட்டம் குழித்துறை கிராமம் புல எண்..D8/48-8 கழுவன்திட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்,டி அமைக்க இடையூறாக நிற்கும் 7 தேக்கு மரங்கள் மற்றும் 8 சிதிலடைந்த மரங்கள் விறகு மரங்கள் முறித்து சொந்தசெலவில் அப்புறப்படுத்தி எடுத்து செல்ல 20-01-2022-ல் பொதுஏலம் .ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்த புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை பொது ஏலத்தில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு ஏலத்தொகை கோரப்பட்டது.

| | |
|---|---|
| 1. திரு.என். குமார்<br>பாரதி தெரு,<br>இறச்சகுளம்- 629901 | ஏலகேட்பு தொகை ரூபாய்<br>ரூ.1,35,500/- |
| 2. அபிலின்மோசஸ்,<br>த/பெ. ஜெயசந்திரன்,<br>வெள்ளங்கெட்டி,<br>ஐரேனிபுரம். | ஏலகேட்பு தொகை ரூபாய்<br>ரூ.1,35,000/- |

மேற்படி கேட்கப்பட்டுள்ள ஏலத்தொகையில் உச்ச ஏலத்தொகை கோரிய திரு.என். குமார் என்பவரது ஏல கேட்டு தொகையானது மாவட்ட

வன அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட மதிப்பீட்டு தொகை விட அதிகமாக உள்ளதால் ஒப்புதல் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.142/2019/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3845**

**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

நடைபெறவிருக்கின்ற நகர்புற உள்ளாட்சித்தேர்தல் 2022 முன்னிட்டு தேர்தல் செலவுகளுக்காக உத்தேச செலவின தொகை ரூ.30,00,000/- (முப்பது இலட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.167/2019/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3846**

**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குடிநீரில் குளோறினேஷன் செய்வதற்கு Liquid Chlorine தேவையிருப்பதால் ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் குளோரினேஷன் வாங்கிட மன்ற ஒப்புதல் அளித்துள்ளதனடிப்படையில் 7-1-2022-ல் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

1) திரு.பி. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர். — மதிப்பீட்டு விலை விகிதம்

2) திரு.பி. ஜெயசந்திரன் ஒப்பந்ததாரர். — மதிப்பீட்டை விட 5.56% கூடுதல்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. ஜெயபிரகாஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
கோப்பு எண்.3048/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3847**
**மன்றம் ஏற்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குழித்துறை நகராட்சி சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B14-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திருமதி.T. செல்வி என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகை ரூ.190896/- திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்பு தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1774/2021/A2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3848**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

குழித்துறை நகராட்சி சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடை எண்.B9 மற்றும் A10-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.T. வைகுண்டமணி என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகை ரூ.3,90,779/-ஐ திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்பு தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2265/2021/A2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3849**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் இந்நகராட்சி பகுதியினை தூய்மையாக வைத்துக்கொள்ளவும் குப்பைகளை தரம்பிரித்து கொடுக்கவும், தனியர் குடியிருப்பில் உரம் தயாரித்தல் பணிகளை காணொலி மூலம்

நகராட்சி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த LED Pojecter தயார் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2389/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3850**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனுசாமி வணிகவளாகத்தில் கடை எண்.F13 பெடரல் வங்கியாக செயல்படுகிறது. வங்கிக்கான குத்தகை உரிமை காலம் 30-11-2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைந்த நிலையில் மேலும் மூன்றாண்டுகளுக்கு ஏற்கனவேயுள்ள மாத வாடகை தொகையில் 15% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1623/2009/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3851**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வெட்டுவெந்நி சப்பாத்து சமீபம் உள்ள கழிப்பறை, வி.எல்.சி. சப்பாத்து சமீபம் மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தை பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகளை ரூ.3,00,000/- இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு செய்ய 21-01-2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) | திரு.சி. சுரேஷ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 6.76% குறைவு |
| 2) | திரு.வி. வர்க்கீஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 10.00% குறைவு |
| 3) | திரு.கே. பைஜீ, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 16.36% குறைவு |
| 4) | திரு.ற்றி. அமிர்தராஜ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.58% குறைவு |
| 5) | திரு.சி.ஆர்.ஆர்.எ. ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 5.97% குறைவு |
| 6) | திரு.எஸ். பாபு, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 19.95% குறைவு |
| 7) | திரு.பி. ஜெயபிரகாஷ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 20.89% குறைவு |

8) திரு.ற்றி. ரெகு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 9.70% அதிகம்

மேற்படி பணிக்கு வரப்பெற்ற 8 ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி 10% அதிகமாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு.
ந.க.எண்.2127/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3852**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்திலுள்ள பழுதடைந்த தொட்டி மற்றும் இயந்திரம், கழிவுநீர் கால்வாய்களை சரி செய்ய பொதுசுகாதாரப்பிரிவின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்படி பணி அத்தியாவசிய பணியாக இருப்பதால் ரூ.2,00,000/- இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரர் திரு. ஜாண்சன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்து பணியினை விரைவில் செய்து முடித்திட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3853**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வி.எல்.சி.கலையரங்கம் அருகிலுள்ள பொதுகழிப்பிடத்தை ரூ.3,33,000/- இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு செய்ய 21-01-2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்வருமாறு.

1) திரு.கே. பைஜீ, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 27.39% குறைவு
2) திரு.ற்றி. ரெகு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 11.01% அதிகம்
3) திரு.பி. ஜெயபிரகாஷ். ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 22.83% குறைவு
4) திரு.ற்றி. அமிர்தராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.08% குறைவு
5) திரு.வி. வர்க்கீஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 10.00% குறைவு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி 10% அதிகமாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு.
ந.க.எண்.2127/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3854**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 14</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதியில் வசிக்கும் நகர மக்களுக்கு (குழித்துறை பகுதி) குடிநீர் வினியோகம் செய்ய பிரதான குழாய்களில் மற்றும் வினியோக குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்ய ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் வேலைகளை செய்திட 7-1-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 16.30% குறைவு ஒப்பந்ததாரர்.

2) திரு.பி. ஜெயசந்திரன் மதிப்பீட்டை விட 15.90% குறைவு ஒப்பந்ததாரர்.

3) திரு.பி. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டை விட 24.45% குறைவு ஒப்பந்ததாரர்.

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விலையை விட 10% அதிகமாக குறைவாக வழங்கியுள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு
கோப்பு எண்.3046/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3855**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 15</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதியில் வசிக்கும் நகர மக்களுக்கு (மார்த்தாண்டம் பகுதி) குடிநீர் வினியோகம் செய்ய பிரதான குழாய்களில் மற்றும் வினியோக குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்ய ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் வேலைகளை செய்திட 7-1-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

1) திரு.சி. சுரேஷ், ஒப்பந்ததாரர். — மதிப்பீட்டை விட 4.26% குறைவு

2) திரு.பி. ஜெயசந்திரன் ஒப்பந்ததாரர். — மதிப்பீட்டை விட 15.90% குறைவு

3) திரு.பி. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர். — மதிப்பீட்டை விட 24.45% குறைவு

4) A.S. Power Solution, Contractor. — மதிப்பீட்டை விட 3.72% கூடுதல்

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விலையை விட 10% அதிகமாக குறைவாக வழங்கியுள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு.
கோப்பு எண்.3047/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3856**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 16</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதியில் வசிக்கும் நகர மக்களுக்கு (குழித்துறை பகுதி) குடிநீர் வினியோகம் செய்ய பிரதான குழாய்களில் மற்றும் வினியோக குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்ய ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் வேலைகளை செய்திட 21-1-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

1) திரு.சி. சுரேஷ் மதிப்பீட்டை விட 9.66% குறைவு ஒப்பந்ததாரர்.

2) திரு.பி. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டை விட 24.93% குறைவு ஒப்பந்ததாரர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விலையை விட 10% அதிகமாக குறைவாக வழங்கியுள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு
கோப்பு எண்.3046/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3857**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 17</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதியில் வசிக்கும் நகர மக்களுக்கு (மார்த்தாண்டம் பகுதி) குடிநீர் வினியோகம் செய்ய பிரதான குழாய்களில் மற்றும் வினியோக குழாய்களில் ஏற்படும் பழுதினை சரி செய்ய ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் வேலைகளை செய்திட 21-1-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

1) திரு.சி. சுரேஷ், மதிப்பீட்டை விட 10.22% குறைவு ஒப்பந்ததாரர்.

2) திரு.பி. ஜெயபிரகாஷ் மதிப்பீட்டை விட 24.93% குறைவு ஒப்பந்ததாரர்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விலையை விட 10% அதிகமாக குறைவாக வழங்கியுள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு.
கோப்பு எண்.3047/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3858**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 18</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் தினசரி காய்கறி சந்தையின் பராமரிப்புக்கென சட்டசபையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2020-2021-ன்கீழ் ரூ.23.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி சந்தையின் கட்டிடங்கள் கட்டப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலான காரணத்தினாலும், கட்டிடங்கள் சிதிலமடைந்து காணப்படுவதாலும் கட்டிடங்களை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக சந்தை கட்டுவதற்கென பிரேரணை தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு பிரேரணை தயாரிப்பதற்கு ஆலோசகர் மூலம் பணியினை மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இப்பணியினை அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை Educadtech Nagercoil அவர்களிடம் ஒப்படைத்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1967/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3859**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 19</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு பகுதியில் விநயாகர் கோவில் சமீபம் உள்ள சிறுபாலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்காக உடைக்கப்பட்டு சரி செய்யாமல் மூடப்பட்ட நிலையில் உள்ளது. இதனை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.1,10,000/- பணிகள் செய்திட 21-01-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விவரம் பின்வருமாறு.

1) திரு.வி. வர்க்கீஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 9.98% குறைவு

2) திரு.சி. ராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 12.05% குறைவு

3) திரு.ற்றி. அமிர்தராஜ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.09% குறைவு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி 10% அதிகமாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண்.3064/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3860**

**மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 20</u>**

2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்குகள் 31-03-2022-ல் முடிக்கப்பட வேண்டிய நிலையில், கணக்கர் திரு.எஸ். முருகன் மருத்துவ விடுப்பில் இருந்து வருவதால் அவசர அவசியத்தை கருதி வெளி நபரை (Chartered Accountant) வைத்து Online-ல் ஆண்டுக்கணக்குகள் முடிக்க உத்தேச செலவு ரூ.50000/- பொது நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். /2022/பி1

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3861**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 21</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் Supply Installation and Commissioning of main HT Service Connection work at Gnaranvilai Filter House-ல் ரூ.24.40 இலட்சத்தில் வேலை செய்ய நகர்மன்ற தீர்மான எண்.3693, நாள் 28-5-2021-ன்படி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதின் அடிப்படையில் பணிகள் செய்ய 2-6-2021-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மின் அளவு 150kw.-க்கு அதிகமாக இருப்பதால் தாழ்வு அழுத்த மின் இணைப்பை உயர் அழுத்த மின்இணைப்பாக மாற்ற தற்பொழுது மின்சார துறையினரால் அறிவுறுத்தப்பட்டதின்பேரில் இப்பணியானது 15th CFC 2020-2021 திட்டத்தின்கீழ் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் நிறைவடையும் தருணத்தில் உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்தில் இத்திட்டத்தின் மூலம்

புதியதாக மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் நிலையில் தேவைப்படும் மின் அளவு 99.21kw மட்டுமே ஆகும். மேலும் இந்த அளவு மின்சாரத்துறையினரால் தெரிவிக்கப்பட்ட 150kw விட குறைவாக இருப்பதின் காரணத்தினால் உயர் அழுத்த மின்இணைப்பை மாற்ற தேவையில்லாத காரணத்தினால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.15/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3862**

**ரத்து செய்ய அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 22</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று சுத்திகரிப்பு நிலையத்தில் Supply Delivery and Commissioning of main MV panel and APFC panel at Gnaranvilai Filter House-ல் ரூ.24.00 இலட்சத்தில் வேலை செய்ய நகர்மன்ற தீர்மான எண்.3692, நாள் 28-5-2021-ன்படி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதின் அடிப்படையில் பணிகள் செய்ய 2-6-2021-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மின் அளவு 150kw.-க்கு அதிகமாக இருப்பதால் தாழ்வு அழுத்த மின் இணைப்பை உயர் அழுத்த மின்இணைப்பாக மாற்ற தற்பொழுது மின்சார துறையினரால் அறிவுறுத்தப்பட்டதின் பேரில் இப்பணியானது 15th CFC 2020-2021 திட்டத்தின்கீழ் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் நிறைவடையும் தருணத்தில் உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்தில் இத்திட்டத்தின் மூலம் புதியதாக மின்மோட்டார்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் நிலையில் தேவைப்படும் மின் அளவு 99.21kw மட்டுமே ஆகும்.

மேலும் இந்த அளவு மின்சாரத்துறையினரால் தெரிவிக்கப்பட்ட 150kw விட குறைவாக இருப்பதின் காரணத்தினால் உயர் அழுத்த மின்இணைப்பை மாற்ற தேவையில்லாத காரணத்தினால் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.14/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3863**
**ரத்து செய்ய அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் எண். 23**</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள பகுதிகளுக்கு 1718 எண்ணங்கள் கொண்ட தெருவிளக்குகளுக்கான பராமரிப்பு பணிகள் செய்ய கங்கா எலக்டிரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் 6-12-2021 முடிவடைந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 2/2022 வரை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளதால் மீண்டும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 4/2022 வரை நீட்டிப்பு செய்து ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பழைய ஒப்பந்த விலைவிகிதத்திலேயே தொடர்ந்து 4/2022 வரை வேலை செய்ய அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.35 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1140/2020/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3864**
**அனுமதிக்கப்பட்டது**

<u>**பொருள் எண். 24**</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் கிரைண்டர் பழுதடைந்து மின்கசிவு ஏற்படுவதை சரி செய்யவும்,

குளிர்சாதனபெட்டி பழுதடைந்தை சரி செய்யவும், மின்விசிறி பழுதடைந்துள்ளதை சரி செய்யவும், சுவர்களுக்கு வண்ணம் பூசுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.210000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு பணியினை அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.295/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3865**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 25</u>**

குழித்துறை நகராட்சியின் 15-வது நிதிக்குழு Untied Grant-ன் கீழ் வார்டு எண்.2-ல் பெருங்குளம் முதல் கழுவன்திட்டை வரையுள்ள ஹரிஜன் காலணி சாலையினை ரூ.1.85 இலட்சம் மதிப்பீட்டில் சரி செய்ய மன்றத் தீர்மான எண்.3766, நாள் 18-11-2021 ஒப்புதல் அளித்துள்ளதால் 3-1-2021-ல் வேலை செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி இடத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குழாய் பதிக்கும் பணி நடைப்பெற்றதில் மேற்படி இடம் கனமழையின் காரணமாக சாலையில் பிளவு ஏற்பட்டு பெருமளவு சேதமடைந்துள்ளது. மேற்படி இடம் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் சரி செய்யப்பட்டது. ஆகவே இப்பணிக்கான 3-1-2021-ல் வழங்கப்பட்ட வேலை உத்தரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2604/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3866**

**ரத்து செய்ய அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 26</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி கொண்டிருந்த BOV வாகனம் 9 எண்ணங்கள் பழுது அடைந்துள்ளதால் அதை சரி செய்ய மதிப்பீடு ரூ.4,40,000/-த்திற்கு 11-01-2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

1) மாதவ மோட்டார்ஸ், வெள்ளமடம் - ரூ.3,83,400/-

2) அக்ஷயா மோட்டார்ஸ் - ரூ.3,91,200/-
உண்ணாமலைக்கடை

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மாதவ மோட்டார்ஸ் என்ற நிறுவனத்திற்கு பணியில் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்ற அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு..

அ.-கு.- மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3867**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 27</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்திலுள்ள உரங்களை JCB மற்றும் Tipper வாகனம் மூலம் அப்புறப்படுத்த 17-01-2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு நான்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

I) 1) திரு.D. ஜெஸ்டின்குமார் டிப்பர் நாள் ஒன்றுக்கு ரூ.5200/-
2) திரு.J.சாமுவேல் ஜோஸ்ராஜ் டிப்பர் நாள் ஒன்றுக்கு ரூ.5500/-

II) 1) U.K.Traders JCB ஒரு மணிநேர வாடகை ரூ.1100/-

3) Sarathi Hydraulics centre JCB ஒரு மணிநேர வாடகை ரூ.1300/-

பெறப்பட்ட விலைப்புள்ளியில் வரிசை எண்.1-ல் ஜெஸ்டின்குமார் என்பவரின் விலைப்புள்ளியும், வரிசை எண்.2-ல் U.K.Traders என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.95/2022/H1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3868**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 28</u>**

குழித்துறை நகராட்சி பகுதியில் சேகராகும் பிளாஸ்டிக் கழிவுகளை . R.R.C-ல் சேமித்து பின்னர் பேப்பர் மேன் கம்பெனிக்கு JCB வாகனம் மூலம் லாரியில் ஏற்றி அனுப்பிட 19-01-2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) திரு. ஜெஸ்டின்குமார் - ஒருமணிநேர வாடகை ரூ.1100/-

2) திரு. சாமுவேல் ஜோஸ்ராஜ்- ஒருமணிநேர வாடகை ரூ.1500/-

பெறப்பட்ட விலைப்புள்ளியில் திரு. ஜெஸ்டின்குமார் என்பவரின் விலைப்புள்ளி குறைவானது. எனவே மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2056/2021/H1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3869**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 29</u>**

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையர் அறை மற்றும் சுகாதாரப்பிரிவில் உள்ள சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர்களின் அறையில் நீர் கசிந்து கூரைப்பகுதியிலுள்ள பூச்சு விழுந்து மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. எனவே அவற்றை பூசி பராமரிக்கவும், சேதடைந்துள்ள கதவை மாற்றி புதியதாக கதவு அமைக்கவும், வர்ணப்பூச்சு பூசவும், நகர்மன்ற தலைவர் அறைக்கு புதியதாக Air conditioner வாங்கி பொருத்தவும் ரூ.2.80 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.459/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3870**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 30</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள HP Lazer Jet 2035 Printer, HP Lazer Jet Pro MFP M2227sdm Printer பழுதடைந்துள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில்

கொண்டு புதியதாக இரண்டு Scaner with Printer வாங்க 07-01-2022 அன்று விலைப்புள்ளி கோரியத்தில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) Micronet Systems Computer Sales and Service, Thuckalay — Rs.62000/-
2) Microstuf Computers Karungal — Rs.65200/-
3) Qplus Computers, Marthandam — Rs.66800/-

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் வரிசை எண்.1-ல் Micronet Systems Computer Sales and Service என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் குறைந்த விலைப்புள்ளிக்கு மன்றம் ஒப்பு கொள்ளலாம்.

அ.கு.- பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2602/2021/இ1

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3871**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 31**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள மின் இணைப்புகளில் பயன்படுத்தப்படும் மின் அழுத்தத்தை உயர் மின் அழுத்த இணைப்புகளாக மாற்ற மின்சார வாரியம் கோரியதற்கிணங்க உயரழுத்த மின் இணைப்பாக மாற்றுவதற்கான உட்கட்டமைப்புகளை அமைப்பதற்கு மதிப்பீடுகள் 24.00 இலட்சம் மற்றும் 24.40 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு பணிகளை 15-வது மான்ய நிதிக்குழு 2020-2021-ன்கீழ் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவும் வழங்கப்பட்டது. அதற்கான அனுமதியினை கண்காணிப்பு பொறியாளர், மின்சார வாரியம், நாகர்கோவில் அவர்களிடம் இருந்து பெறுகின்ற கால இடைவெளியில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் குழித்துறை நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது முன்னேற்றத்தில் உள்ளது. பணி நிறைவேற்றி ஒப்படைப்பு செய்து செயல்படுத்தும் காலங்களில் பயன்படுத்தப்படும் மின் அளவு குறைவாக இருப்பதினால் உயர் அழுத்த மின் இணைப்பாக மாற்ற அவசியமில்லை என்பதினால் மேற்கண்ட 2 பணிகளும் இரத்து செய்யப்பட்டது. தற்பொழுது இப்பணிகளுக்கான நிதியில் நகராட்சியில் பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியில்

மேற்கொள்ளப்பட்டு வரும் கீழ்கண்ட பணிகளை மாற்றி 15-வது CFC Fund 2020-2021-ல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| | | | |
|---|---|---|---|
| 1 | Supply and fixing of Shedder Cum Pulvezier Machine | 5.05 lakhs | Solid Waste Management General Fund |
| 2 | Replacement of 150mm DI Pipe at Kaluvanthittai OHT and Construction of Value Pit with Cover slab | 7.50 lakhs | Water Supply |
| 3 | Replacement of 160mm PVC Pipe in distribution main line in NH47 from Pillar No.31 to Municipal limit | 25.00 lakhs | Water Supply |
| 4 | Relaying of 100mm GI Pipe line at Edaikulam in Kuzhithurai Municipality | 3.00 lakhs | Water Supply |
| 5 | Modification of Electical Control Panel in Chappattu Pump House | 3.50 lakhs | Water Supply |
| 6 | Repair and rectification of leakage in 90mm PVC Pipe line at Marthandam Near Kodumkulam | 0.27 lakhs | Water Supply |
| 7 | Repair and Maintenance to MCC at Market | 2.00 lakhs | Solid Waste Management |
| 8 | Supply delivery and fixing of 10 HP open well submersible pump set in Chappattu Pump room | 1.85 lakhs | Water Supply |
| | Total | 48.17 lakhs | |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 462/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3872**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 32</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் நடைபெறும் Biomining மற்றும் FSTP பணிகளை அலுவலகத்தில் இருந்தபடியே கண்காணிப்பதற்கென கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த கேமிராவில் உள்ள வயர்கள் அனைத்தும் பழுதடைந்துள்ளதால் கேமிரா வேலை செய்யவில்லை. அதனை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.3475/- ஆகும். பணியின் அவசியம் மற்றும்

அவசரம் கருதி இப்பணியினை MTL Computer Garden, Marthandam அவர்களிடம் ஒப்படைத்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.460/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3873**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 33</u>**

குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மண்டலம் வாரியாக மனித சக்தியினை பயன்படுத்தி தூய்மை பணி மேற்கொள்ள M/S. Southern Solid Waste Management என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.3803, நாள் 30-11-2021-ன்படி 01-01-2022 முதல் 28-02-2022 வரை இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி அனைத்துப் பணிகளையும் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நாளது வரை அனுமதி பெறப்படாமல் உள்ளது. மேலும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் தற்போது உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மீண்டும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்வாக இயக்குரிடமிருந்து நிர்வாக அனுமதி வரப்பெறும் வரை ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் பணி செய்ய அனுமதியும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2689/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3874**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 34</u>**

குழித்துறை நகராட்சி நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கென 15 எஸ் டைப் இரும்பு நாற்காலிகள் திருநெல்வேலி டான்சி நிறுவனத்திடமிருந்து வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.50,000/-ற்கு வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
கோப்பு எண்.504/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3875**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 35</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள ஜேக்கப் நகர் முதல் நரியன்விளை சாலை வரை உள்ள பகுதி கல் சாலையாக உள்ளது. இதனை சிமெண்ட் சாலையாக மாற்றுவதற்கு ரூ.18.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 15-வது நிதிக்குழு மான்யம் 2020-2021-ன்கீழ் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.3764, நாள் 18-11-2021-ன் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது. தொழில் நுட்ப அனுமதி பெறப்படும்பொழுது சாலையின் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட ஒரு இனம் (CC 1:4:8) தேவையில்லாத காரணத்தினால் திருத்திய மதிப்பீடு ரூ.13.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டிற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2605/2021/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3876**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.36</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உள்ள நரியன்விளையிலிருந்து இடைவிளாகம் செல்லும் சாலை (149002R005) சாலையானது தார் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 408M. ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பிரதான மற்றும் பகிர்மானக்குழாய், வீட்டு குடிநீர் இணைப்புகளை வழங்கும் போது சாலையானது மிகவும் பழுதடைந்து மக்களின் பயன்பாட்டிற்கு மிகவும் இடையூறாக உள்ளது. மக்களிடம் வந்த புகாரின் நிமித்தம் 15-வது நிதிக்குழு மானிய நிதி 2020-2021-ன்கீழ் இச்சாலையின் ஒரு பகுதியானது சீரமைக்கப்படும் பொருட்டு ரூ.7.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.294/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3877**

**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.37</u>**

அரசாணை எண்.16, நாள் 20-01-2022-ன்படி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022 நிதியாண்டிற்கு நகராட்சி பராமரிப்பில் உள்ள மார்த்தாண்டம் தினசரி சந்தையில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.423.90 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டு திட்ட நிதியாக ரூ.296.73 லட்சமும் நகராட்சி பங்கு தொகையாக ரூ.127.17 லட்சமும் ஆக மொத்தம் ரூ.423.90 மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்ட நிலையில், மேற்படி பணியில் ஏற்கனவே உள்ள கீழ்கண்ட கடைகள் இடித்து அகற்ற வேண்டியுள்ளதால் 1-4-2022 முதல் உரிமம் ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் தினசரி சந்தையில் உள்ள A.பிளாக் கடைகள் | 53 எண்ணம் |
| 2 | மார்த்தாண்டம் தினசரி சந்தையில் உள்ள B.பிளாக் கடைகள் | 48 எண்ணம் |
| 3 | மார்த்தாண்டம் தினசரி சந்தையில் உள்ள C.பிளாக் கடைகள் | 49 எண்ணம் |
| 4 | மார்த்தாண்டம் தினசரி சந்தையில் உள்ள D.பிளாக் கடைகள் | 6 எண்ணம் |

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3878**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.38</u>**

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சி திட்டப்பணிகளை பொங்கல் விழா சிறப்பு மலரில் விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது. பட்டியலில் கண்ட தொகையினை வருவாய் நிதியின்கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

1. தினத்தந்தி பத்திரிகைக்கு - ரூ.9840/-
2. மாலை மலர் பத்திரிகைக்கு - ரூ.9912/-

3. Kalpublication தினகரன் - ரூ.9975/-

4. தினமுரசு பத்திரிகைக்கு - ரூ.9744/-

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3879**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.39**

குழித்துறை நகராட்சியின் ஞாறான்விளை தலைமை நீரேற்று நிலையம் நுழைவுப்பகுதியில் மழைநீர் வடிகாலின் மீது சிறுபாலம் உள்ளது. மேற்படி சிறுபாலம் தற்பொழுது பழுதடைந்து வாகனங்கள் தலைமை நீரேற்று நிலையத்திற்குள் செல்ல முடியாமல் உள்ளது. அவசர தேவைக்கு என்று லாரியில் தண்ணீர் எடுக்க சிரமமாக உள்ளதால் பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றி விட்டு புதியதாக சிறுபாலம் கட்டுவதற்கென மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி இப்பணியினை பொதுநிதியில் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.583/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3880**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.40**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு அரசு பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நிதி ஒதுக்கீடு NUHM ROP-2021-2022-ன்கீழ் செய்யப்பட்டுள்ளது. அதற்கென விளவங்கோடு வட்டம் குழித்துறை நகராட்சி புல எண்.பி9/11-ல் அமைந்துள்ள நிலத்தில் 0.05.47 ஹெக்டேர் நிலத்தை ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கென நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பிரேரணை மற்றும் மதிப்பீடு தயார் செய்வதற்கென Structural design பெறுவதற்கு மண் பரிசோதனை செய்ய அரசு பொறியியல் கல்லூரி,

திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டதில் ரூ.21240/-ஐ செலுத்த கேட்டு Lr.No.22/GCE/CIVIL/Consultancy 2022, நாள் 10-01-2022-ன் மூலம் கடிதம் பெறப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி தொகையினை அரசு பொறியியல் கல்லூரிக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.43/2022/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3881**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.41</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 21 முடிய வார்டுகளில் காலிமனை வரி நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டு வந்த நிலையில் மேற்படி காலிமனையில் சம்மந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் கட்டிடம் கட்டப்பட்டு அதற்கான கட்டிடவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் காலிமனை வரி ரத்து செய்யப்படாத நிலையில் நாளது வரையில் காலிமனை வரி கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்கள் வார்டு வாரியாக ரத்து செய்யப்பட வேண்டிய காலிமனை விவரம் குறித்து அறிக்கை செய்துள்ளார்கள். எனவே கீழ்கண்டவாறு வார்டு வாரியான காலிமனைவரி தொகை ரூ.15,99,591/- தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டப்பிரிவு 118-ன்கீழ் கேட்பு தொகை வஜா செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வார்டு எண் | வஜா செய்யப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|
| 1 | 100651 |
| 2 | 37954 |
| 3 | 18048 |
| 4 | 14456 |
| 5 | 28685 |
| 6 | 70946 |
| 7 | 43170 |
| 8 | 38618 |
| 9 | 48595 |
| 10 | 196294 |
| 11 | 50239 |
| 12 | 65631 |
| 13 | 58008 |

| | |
|---|---|
| 14 | 72223 |
| 15 | 240758 |
| 16 | 97574 |
| 17 | 219668 |
| 18 | 82465 |
| 19 | 49017 |
| 20 | 45024 |
| 21 | 21567 |
| மொத்தம் | 1599591 |

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2965/2021/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3882**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.42</u>**

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள தொழில்வரி செலுத்தவேண்டிய நிறுவனங்களை நகராட்சி வருவாய் உதவியாளர்களை கொண்டு கணக்கெடுப்பு பணி செய்யப்பட்ட போது சரியான முகவரி இல்லாத நிறுவனங்கள் மற்றும் இந்நகராட்சி பகுதியிலிருந்து வேறு பேரூராட்சி பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தற்போது செயல்படாத நிறுவனங்கள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். எனவே கீழ்கண்டவாறு வார்டு வாரியான தொழில்வரி தொகை ரூ.36,50,909/- தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டப்பிரிவு 118-ன்கீழ் கேட்பு தொகை வஜா செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வார்டு எண் | வஜா செய்யப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|
| 1 | 86436 |
| 2 | 2310 |
| 3 | 4071 |
| 4 | 138912 |
| 5 | 111248 |
| 6 | 214923 |
| 7 | 0 |
| 8 | 39313 |
| 9 | 147401 |
| 10 | 10252 |
| 11 | 467223 |
| 12 | 7419 |
| 13 | 64858 |

| | |
|---|---|
| 14 | 75849 |
| 15 | 325023 |
| 16 | 10192 |
| 17 | 633738 |
| 18 | 228633 |
| 19 | 401088 |
| 20 | 20016 |
| 21 | 662004 |
| மொத்தம் | 3650909 |

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2965/2021/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3883**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.43**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 21 முடிய வார்டுகளில் இடிந்த கட்டிடங்களின் வரிவிதிப்புகளை ரத்து செய்திட நகர்மன்ற தீர்மான எண்.2464, நாள் 05-02-2016-ன்படி ஒப்புதல் பெறப்பட்டு இந்நாள் வரையிலும் ரத்து செய்யப்படாமல் உள்ளது. இதனால் மீண்டும் வரி தொகைக்கான கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்கள் வார்டு வாரியாக ரத்து செய்யப்பட வேண்டிய இடிந்த கட்டிடங்கள் விவரம் குறித்து அறிக்கை செய்துள்ளார்கள். எனவே கீழ்கண்டவாறு வார்டு வாரியான இடிந்த கட்டிடங்களுக்கான தொகை ரூ.7,59,322/- தமிழ்நாடு மாநில நகராட்சி சட்டப்பிரிவு 118-ன்கீழ் கேட்பு தொகை வஜா செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வார்டு எண் | வஜா செய்யப்பட வேண்டிய தொகை ரூபாய் |
|---|---|
| 1 | 11647 |
| 2 | 18178 |
| 3 | 9806 |
| 4 | 15024 |
| 5 | 19736 |
| 6 | 21850 |
| 7 | 10220 |
| 8 | 15658 |
| 9 | 98964 |
| 10 | 16683 |

| | |
|---|---|
| 11 | 34058 |
| 12 | 15050 |
| 13 | 19176 |
| 14 | 12138 |
| 15 | 26309 |
| 16 | 57050 |
| 17 | 102260 |
| 18 | 39490 |
| 19 | 1890 |
| 20 | 16412 |
| 21 | 197723 |
| மொத்தம் | 759322 |

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2965/2021/அ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3884**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.44</u>**

இந்நராட்சியில் கீழ்காணும் வரியில்லா இனங்கள் - ஓராண்டு குத்தகை இனங்கள் 2020-2021-ம் ஆண்டிற்கு கணினியில் இருமுறை கேட்பு எழுப்பட்டுள்ளது.

1. **பேருந்து நிலைய கட்டண கழிப்பறை**

| வ.வி.எண் | வரி விதிப்புதாரர் பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 149/201701 | கிளிட்டஸ் | 2020-2021 | 2,64,828 |
| 149/2019258 | சைன் குமார் | 2020-2921 | 1,63,975 |

மேற்காணும் வரிவிதிப்புகளின் வ.எண்.2-ல் உள்ள திரு. சைன்குமார் என்பவருக்கு இவ்வலுவலக 19-02-2020-ம் தேதியில் செயல்முறை ஆணை எண்.2036/2019/அ2-ல் 2020-2021-ம் ஆண்டு முதல் புதியதாக ஒப்பந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது. வரிசை எண்.1-ல் உள்ள திரு.கிளிட்டஸ் என்பவரின் ஒப்பந்த உரிமம் 2019-2020-ம் ஆண்டில் முடிவடைந்து விட்டது. திரு.கிளிட்டஸ் என்பவர் தவறுதலாக 2020-2021-ம் ஆண்டில் கணிணியில் கேட்பு தொகை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கேட்புத்தொகை ரூ.264828/- தள்ளுபடி செய்ய மன்றத்தில் அனுமதிக்கலாம்.

2. **வெட்டுவெந்நி மார்க்கெட்**

| வ.வி.எண் | வரி விதிப்புதாரர் பெயர் | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 149/201503 | ராஜமணி | 2020-2021 | 327600 |
| 149/2019261 | பாபுராஜ் | 2020-2021 | 308330 |

மேற்காணும் வரிவிதிப்புகளில் வரிசை எண்.2-ல் உள்ள திரு. பாபுராஜ் என்பவருக்கு இவ்வலுவலக 19-02-2020-ம் தேதியில் ந.க.எண்.2036/2019/அ2 செயல்முறை ஆணையில் 2020-2021-ம் ஆண்டு முதல் புதியதாக ஒப்பந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது. வரிசை எண்.1-ல் உள்ள திரு. ராஜமணி என்பவரின் ஒப்பந்த உரிமம் 2019-2020-ம் ஆண்டில் முடிவடைந்து விட்டன. திரு.ராஜமணி என்பவருக்கு தவறுதலாக 2020-2021-ம் ஆண்டில் கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்ட தொகை ரூ.3,27,600/-ஐ தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கு.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்:2917/2021/அ2

## நகர்மன்றத் தீர்மானம் எண்.3885
## அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.45**

இந்கராட்சி பேருந்து நிலையம் கட்டண கழிப்பறை 2018-2019 ஆண்டிற்கான உரிமம் திரு.கிளிட்டஸ் என்பவரால் அனுபவிக்கப்பட்டது. அன்னார் மேற்படி வருடத்திற்குரிய ஆண்டு உரிம தொகை ரூ.2,46,828/- தற்போது வரை செலுத்தப்படவில்லை. அன்னாரின் காலங்கடந்த வைப்புதொகை பதிவேட்டில்

| தொகுதி | பக்க எண் | வரிசை எண் |
|---|---|---|
| V | 17 | 84 |

ரூ.4,14,250/- உள்ளது. எனவே மேற்படி வைப்புதொகையில் உள்ள ரூ.264828/-ஐ ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.-மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2917/2021/A2

## நகர்மன்றத் தீர்மானம் எண்.3886
## அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.46**

இந்நகராட்சியில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆண்டு குத்தகை இனங்களுக்கு அதன் எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி ஆண்டு குத்தகை நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. அன்னார்களின் பெயரில் காலங்கடந்த வைப்புதொகையில் தொகை இருப்பில் உள்ளது. மேற்படி தொகையினை இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி வைப்பு தொகையில் இருந்து ஆண்டு குத்தகை இனங்களுக்கு வரவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | வரி விதிப்பவரின் பெயர் | குத்தகை உரிமம் | நிலுவை தொகை | காலங்கடந்த வைப்புதொகை பாக்கி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகுதி | பக்க எண் | வரிசை எண் | தொகை |
| 1 | கிருஷ்ணதாஸ் 149/201804 2020-2021 | கன்றுகாலி சந்தை | 114850 | V | 235 | 128 | 100000 |
| | | | | | 239 | 156 | 10000 |
| | | | | | | 157 | 4850 |
| | | மொத்தம் | | | | | 114850 |
| 2 | கிறிஸ்துராஜ் 149/201925 2020-2021 | வி.எல்.சி. கலையரங்கம் | 758247 | V | 197 | 117 | 209112 |
| 3 | ஷாஜிகுமார் 149/201810 2020-2021 | பாரா உந்து நிலையம் | 22140 | V | 239 | 165 | 24100 |
| | | | 3990 | | 235 | 131 | 2030 |
| | | மொத்தம் | 26130 | | | | 26130 |
| 4 | செல்வமணி 149/201806 2020-2021 | கட்டண கழிப்பறை | 12860 | V | 239 | 163 | 15170 |
| | | | 2310 | | | | |
| | | மொத்தம் | 15170 | | | | 15170 |
| 5 | மனோகரன் 149/201809 2020-2021 | கட்டண கழிப்பறை | 41430 | III | 42 | 20-1-2009 | 48890 |
| | | | 7460 | | | | |
| | | மொத்தம் | 48890 | | | | 48890 |
| 6 | ராஜமணி 149/2008057 2010-2011 | மரங்கள் மேலாதாயம் | 5600 | V | 179 | 2 | 5880 |
| | 2011-2012 | | 490 | | | | |
| | GST | | 1095 | | | | |
| | | மொத்தம் | 7185 | | | | 5880 |

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.2917/2021/A2

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3887**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.47</u>**

இந்நகராட்சியில் ஒப்பந்தகாரர்களாக பணி செய்து இடைநிறுத்தம் செய்த ஒப்பந்தகாரர்களின் பெயரில் தொழில்வரி நிலுவையாக உள்ளது.மேற்படி ஒப்பந்தகாரர்களிடமிருந்து தற்போது பில்கட்ட இயலாத நிலுவையில் உள்ளது. எனவே ஒப்பந்தகாரர்களின் பெயரில் கீழ்காணும் விவரப்படி காலங்கடந்த வைப்புதொகை பட்டியலில் தொகை உள்ளது. எனவே காலங்கடந்த வைப்புதொகையில் இருந்து அன்னாரின் பெயரில் நிலுவையாக உள்ள தொழில்வரிக்கு ஈடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | K.தாஸ் | 6250 |
| 2 | சத்தியநேசன் | 6250 |
| 3 | ஜெயராஜன் | 2500 |
| 4 | ஜாண்சன் | 14615 |
| 5 | P. தேவராஜன் | 1250 |
| 6 | ஜீன்ஸ் | 16961 |
| 7 | வீரசிம்ஹன் | 6250 |
| 8 | எலியாஸ் | 23294 |
| 9 | டார்வின் | 25131 |
| | மொத்தம் | 102501 |

அ.கு. அனுமதிக்கலாம்
ந.க.எண். 417/2021/அ1

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3888**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.48</u>**

இந்நகராட்சி பகுதியில் செயல்படும் நீதிமன்றம் கட்டிடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு கீழ்காணும் விவரப்படி தண்ணீர் கட்டணம் நிலுவையாக உள்ளது.

| Water Charges | | | | |
|---|---|---|---|---|
| Sl. No. | Name of the Office | Arrear | Current | Total |
| 1 | Municif Court Quarters | 17454 | 1800 | 19254 |
| 2 | Magistrate Quarters | 8727 | 600 | 9327 |
| 3 | Sub Judicial Quarters | 5356 | 600 | 5956 |
| 4 | Sub Magistrate Quarters-1 | 5305 | 600 | 5905 |
| 5 | Sub Magistrate Quarters-2 | 10187 | 600 | 10787 |
| 6 | Sub Magistrate Quarters-3 | 10520 | 600 | 11120 |
| | Total | 57549 | 4800 | 62349 |

(1) இந்நகராட்சியில் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் தொகுதி-1-ல் கீழ்காணும் விவரப்படி நீதிமன்ற கட்டிடங்களுக்கு சொத்துவரி கூடுதல் தொகை வசூல் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி நீதிமன்ற கட்டிடங்களுக்கு தண்ணீர் கட்டணம் நிலுவையினை மேற்படி கூடுதலாக செலுத்திய சொத்துவரி தொகையில் இருந்து ஈடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Lapsed Department Register Details | | | | |
|---|---|---|---|---|
| Sl. No. | Name of the Office | Page No.7 | Page No.8 | Page No.15 |
| 1 | பஞ்சாயத்து நீதிமன்றம் | 555 | 1110 | 3040 |
| 2 | கிளைண்ட் | 456 | 962 | 1634 |
| 3 | முதல் வகுப்பு நீதிமன்றம் | 143 | 286 | 1581 |
| | | | | Page No.17 |
| 4 | | 1110 | 1110 | 1796 |
| 5 | | 912 | 912 | 3592 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | Page No.18 |
| 6 | | 286 | 286 | 3592 |
| 7 | | 1110 | 1586 | 3592 |
| 8 | | 912 | 1354 | 3592 |
| | | | | Page No.19 |
| 9 | | 286 | 577 | 3592 |
| | | | Page No.9 | |
| 10 | | 1110 | 2062 | 5644 |
| 11 | | 912 | 1796 | 5644 |
| 12 | | 286 | 868 | 0 |
| | Total | 8078 | 12909 | 37299 |

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.73/2020/இ1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3889**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.49**

இந்நகராட்சியில் பணியாற்றும் திரு. ஸ்டான்லிகுமார், சுகாதார அலுவலர் என்பவர் இராமநாதபுரம் நகராட்சியிலிருந்து குழித்துறை நகராட்சிக்கு பணி மாற்றலாகி வந்தமைக்கு மாறுதல் பயணப்படி ரூ.21200/-ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2414/2018/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3890**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.50**

இந்நகராட்சியில் பணியாற்றும் திருமதி.க. ராமதிலகம், ஆணையாளர் இராஜபாளையம் நகராட்சியிலிருந்து குழித்துறை நகராட்சிக்கு பதவி

உயர்வு பெற்று வந்தமைக்கு மாறுதல் பயணப்படி ரூ.13,900/-ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2414/2018/பி1.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3891**
**அனுமதிக்கப்பட்டது**

**ஒப்பம்/- திருமதி.க. ராமதிலகம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**குழித்துறை நகராட்சி**

**/.உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**குழித்துறை நகராட்சி**